**தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் - 2022**

-----------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனதுஅபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்து இயங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமாகும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாகஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொள்ளப்பட்டது.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால்,நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாத இருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமங்களுடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யதிருக்காததுடன் கிரயம் ரூபா 202,029,783 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் நிறுவகத்தின் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்தள்ளதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த ரூபா 25,000,000 ஆன மூலதன மானியம் மற்றும் ரூபா 1,327,215 ஆன நன்கொடை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் 2023 ஆண்டின் கணக்கீட்டு அறிக்கைகளை தயாரிப்பதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியளவில் நிறுவனத்தினால் 14 ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொண்டிருந்த போதும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அவ் ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் கற்பனைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு முன்நடவடிக்கை எடுக்க முயற்ச்சி எடுத்துள்ளதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டினுள் 30 ஆண்டு காலத்திற்காக ரூபா 22,440,000 பெறுமதிக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஹந்தான பதன தோட்டத்தின் வருடாந்த குத்தகை பெறுமதியின் நிகழ்கால பெறுமானத்தை கணக்கிட்டு சொத்தக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | உரிய கால எல்லையினுள் உடன்படிக்கையின் தகவல்களை அறிந்து கொள்ள முடியாது போன காரணத்தால் 2022 இறுதிக் கணக்குகளில் உள்ளடக்க முடியாமல் போனதாக மற்றும் எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | குத்தகை காணியின் நிகழ்கால பெறுமானத்தை கணக்கிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டொன்றில் ரூபா 233,190,000 தொகைக்கு மதிப்பீடு செய்திருந்த காணியை மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்கும் போது அத் திகதியிலான ரூபா 42,104,173 ஆன காணிப் பெறுமதியை மீள் மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றாத காரணத்தால் காணிப் பெறுமதி மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 42,104,173 இனால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீள் மதிப்பீட்டு திகதியன்று காணிகளின் பெறுமானத்தை கணக்குகளிலிருந்து அகற்றாத காரனத்தால் ஏற்பட்ட ரூபா 42,104.173 ஆன காணிகளின் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மிகை கணக்கிடலை 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டினுள் 50 அலகு சொத்துக்களை ஏலவிற்பனை செய்வதற்காக ரூபா 1,441,300 ஆன வருமானமொன்று கிடைத்திருந்த போதும் அதன் கிரயத்தை மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வை கணக்கிட்டு கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வை கணக்கிட்டு எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 82,377,491 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 102,650,637 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,273,146 ஆன வளர்ச்சியொன்றைக் காண்பித்தது. இவ் வளர்ச்சிக்கு மீண்டெழும் மானியங்கள் அதிகரித்தல் மற்றும் பெறுமானத்தேய்வு குறைவடைந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்த பின்னர் நிறுவகத்தினால் அதற்காக செலவு செய்ய வேண்டியதாக உடன்படிக்கையில் எவ்வித கடப்பாடும் இல்லாதிருக்கையில் 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையான காலத்தினுள் Biofilm Bio Fertilizer கருத்திட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 138,931,059 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அவ் ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்த கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மூலம் வருமானத்தின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ளாது 2014 முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 7,380,146 தொகை Royalty Payment ஆக பெற்றுக் கொண்டிருந்தது. | 2014 ஆண்டின் பின்னர் பணம் செலவிடப்பட்டுள்ளது இக் கருத்திட்ட கண்டுபிடிப்புகளை ஏனைய பயிர்களிற்கு பயன்படுத்த முடியுமான விதத்தை அவதானிக்கவும் யூரியா பசளை பயன்பாட்டை முற்றாக நிறுத்தி சேதன பசளையை மாத்திரம் நெற்பயிர் செய்கைக்கு பயன்படுத்துவதற்கு காணப்படும் இயலுமையை அவதானிப்பதற்காகவென. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உரிய சாத்தியபாட்டு ஆய்வொன்றின்றி செயற்படுத்தி இருந்த ஒன்றிணைந்த | அம் மென்பொருளின் பயன்படுத்த முடியுமான பாகங்களை 2023 ஆண்டில் | முற்பணத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| மென்பொருள் தொகுதியொன்றை (intergrated software) இடைநடுவே நிருத்துவதற்கு முகாமைத்தவ சபை தீர்மானித்திருந்த போதும் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தியிருந்த ரூபா 660,000 ஆன முற்பண தொகையை அதற்கு பொறுப்புவாயந்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சனவரி மாதம் முதல் பயன்படுத்திக் கொண்டு தொகுதியை மேம்படுத்தும் நடவடிகைகள் மேற்கொள்வதாக. | வெண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 6,500,000 இனை செலவிட்டு செயற்பட்டுக் கொண்டிருந்த Waste water Treatment at Service Station ஆராய்ச்சி கருத்திட்டம் மற்றும் கடந்த 03 வருட காலத்தினுள் செயற்படுத்திய பெறுமதியை கண்டறிய முடியாது போன 03 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதியளவில் செயற்படுத்தாது இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. | ஆராய்ச்சியின் முன் நடவடிக்கைகளுக்காக ஏற்பாடு மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் கள் இல்லாத காரணத்தால் முன்நோக்கி செய்து கொள்ள முடியாமளிலிருப்பதாக. | எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளக் கூடியவாறு ஆராய்ச்சி நடவடிக்கைகளை முடியுறுத்த வேண்டும். |

**3.3 நிதிய குறைப்பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 ஆராய்ச்சி மானியங்களிற்குரிய ரூபா 3,251,129 தொகை ஒராண்டிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டன. | இந்த நிதியத்தை 2023 ஆண்டினுள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | நிதியத்தை குறித்த பணிகளுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | நிறுவகம் ஆரம்பத்திலிருந்து இது வரை 14 ஆராய்ச்சி கருத்திட்டங்களிற்குரியதாக கிடைத்திருந்த 14 ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் விற்பனை செய்யவோ அல்லது ஏனைய முறையில் பயன்படுத்தவோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற்றுக் கொண்டுள்ள ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களை விறபனை செய்யவோ வணிகமயப்படுத்துவதற்கு உரிய பெறுகைகள் நடவடிக்கைகளை ஆரம்பிக்க கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக. | ஆக்கஉரிமை அனுமதிப்பத்திரங்களை சிறந்த விதத்தில் பயன்படுத்த வேண்டும். |